**Election Day Statement by PAFFREL**
**September 21st, 2013**

The polls for the provincial council elections in the Central, North Western and Northern provinces closed at 4 pm today and were generally peaceful. Polling took place in eight electoral districts in the three provinces based on the 2012 electoral register in which a total of 4,328,263 voters were eligible to exercise their franchise. These elections were significant due to the Northern Provincial Council elections being held for the first time and being subjected to national and international scrutiny. There was considerable enthusiasm to be seen amongst voters in the North, which is an encouraging sign of the progressive restoration of democratic spirit amongst the people in post-war Sri Lanka.

On Election Day, PAFFREL deployed 3500 stationary observers, 750 mobile observers, and 8 international observers from the Asian Network for Free Elections (ANFREL). In addition our observation teams were supported by nearly 50 lawyers who volunteered their services on the day of elections. The election observing process was supported by 116 divisional coordinators at divisional secretariat level.

PAFFREL received a total of 106 complaints on Election Day of which 40 complaints were from the Central Province, 32 complaints from the North Western Province and 34 complaints from the Northern Province. Some of these complaints have yet to be verified, and our findings will be included in our final report. Violations reported to us included an incident in which there was shooting in the air and assault of political rivals in Kandy and the burning of an opposition polling agent's house in Mullaitivu.

Altogether, there were pre-polls 495 complaints of which 117 were about violence and threats of violence. There were also attacks on party campaign offices. There were 36 assaults which led to the hospitalization of 43 individuals. Intra party violence was common. The Northern Province was relatively free from violence, though not from intimidation. There were 90 complaints of misuse of state resources and 244 complaints of other violations of election laws.

Among the complaints that PAFFREL was able to verify, the most serious in terms of their impact on the democratic process were the incidents in the Northern Province. Our observers received several complaints of incidents of military personnel getting involved in the election process. The complaints included the military campaigning for a few selected candidates in a few selected areas, advising voters

for whom to vote and not vote, and an attack on the residence of a prominent opposition TNA candidate on the night before the elections. One of PAFFREL's volunteers, a lawyer attached to one of our five Complaints Units in the Northern Province, who rushed to the scene was assaulted and had to be hospitalized.

PAFFREL's international observers noted prior to the election that, "The direct participation of the military remains the most contentious concern of the public, the opposition parties/candidates as well as civil society organizations including members of the clergy." However, the northern army commander denied any involvement of the military in the on-going election when our international observers sought clarification from him on the matter. A senior police officer in the Northern Province accused the TNA and Tamil media of spreading stories to our international observers.

On the day of the election there were further serious violations of election law when small groups of military personnel in civilian attire congregated outside polling stations which had an intimidating impact on onlookers and voters alike. When our observers asked them what they were doing, they said there were observing the polling in order to preserve the peace. Another violation reported to us by our observers was the repeated broadcast by a local television station claiming, falsely, that a TNA candidate had crossed over and joined the government alliance. We also condemn the physical attack on the election observers of another organization by members of the ruling alliance.

In all three provinces, there was blatant abuse of governmental resources of campaigning, including government staff officers, their offices and vehicles. On positive side, we wish to commend the Election Commissioner who tried his best in the circumstances to do whatever was in his capacity, but he lacked the wherewithal to ensure the necessary outcome. We also acknowledge that some senior members of the government and party leaders, as well as many police officers, made sincere attempts to control the abuse of election laws. Their failure points to the need for institutional reform, and a change in the political culture which PAFFREL is committed to work towards.

We also call on the government to investigate the specific attacks on candidates and election observers that took place during the course of the election.

Rohana Hettiarachchie

Executive Director

**පළාත් සභා ඡන්ද විමසීම**

**පැෆ්රල් සංවිධානයේ මාධ්‍ය ප්‍රකාශනය**

**2013 සැප්. මස 21 වන දින**

උතුරු මධ්‍යම සහ වයඹ පළාත් සභා සඳහා නියෝජිතයන් 142 දෙදෙනෙකු පත් කර ගැනීම සඳහා පැවති මැතිවරණයේ ඡන්දය ප්‍රකාශ කිරීමට වෙන් වූ කාලය අද සවස 4.00ට අවසන් විය. 2012 ඡන්ද හිමි නාම ලේඛණය අනුව ඉහත පළාත් සභා තුනෙහි දිස්ත්‍රික්ක 10 සඳහා ලියාපදිංචි ඡන්දදායකයින් 4328263 ක් ඡන්දය භාවිත කිරීම සඳහා සුදුසු කම් ලබා තිබුණි. මෙම ඡන්දය ජාතික හා ජාත්‍යන්තර වශයෙන් ඉතා වැදගත් සංදිස්ථානයක් ලෙස දැක්විය හැකි ය. වසර ගණනාවක යුද්ධය නිසා තම පළාත් සභාවන්ට නියෝජිතයන් පත් කර ගැනීමේ අවස්ථාව අහිමි වී සිටි උතුරු ජනතාවට මෙය මහඟු අවස්ථාවක් විය. මෙම ඡන්දය තුළ දක්නට ලැබුණු විශේෂත්වය නම් උතුරේ ජනතාව තම ඡන්දය භාවිතා කිරීම සඳහා කටයුතු කළ ආකාරය යි. පශ්චාත් යුද්ධමය ශ්‍රී ලංකාවේ ප්‍රජාතන්ත්‍රවාදය තහවුරු කිරීමේ සාධනීය සළකුණක් ලෙස මෙය සඳහන් කළ හැක.

පැෆ්රල් ආයතනය ස්ථානගත නිරීක්ෂකයන් 3500ක් ද ජංගම නිරීක්ෂකයන් 750ක් ද සහ ආසියානු මැතිවරණ නිරීක්ෂණ ජාලයේ (ANFREL) විදේශීය නිරීක්ෂකයන් 8දෙනෙකුගෙන් සමන්විත නිරීක්ෂක කණ්ඩායමක් ද ඡන්ද නිරීක්ෂණය සඳහා යොදවන ලදි. මෙයට අමතර ව අපගේ නිරීක්ෂණ කණ්ඩායම් හි සහයට 50 කින් යුත් ස්වේච්ඡා නීතිඥ කණ්ඩායමක් ද නිරීක්ෂණ කටයුතුවල යෙදුණි. ඡන්ද නිරීක්ෂණ ක්‍රියාවලියේ සහයට 116 දෙනෙකුගෙන් යුත් නිරීක්ෂණ කණ්ඩායමක් දිස්ත්‍රික් ප්‍රාදේශීය ලේකම් කාර්යාල මට්ටමෙන් යොදවන ලදි.

මැතිවරණ දින පමණක් පැෆ්රල් සංවිධානයට ලැබුණු පැමිණිලි සංඛ්‍යාව 106 ක් වන අතර, මෙයින් පැමිණිලි 40ක් මධ්‍යම පළාතෙන් ද, 32ක් වයඹ පළාතෙන් ද, සහ 36ක් උතුරු පළාතෙන් ද වශයෙන් වාර්තා විය. ඡන්ද නීති උල්ලංඝණය කිරීම් පිළිබඳ අප වෙත ලැබුණු පැමිණිලි අතරින් මහනුවර ප්‍රදේශයෙන් අහසට වෙඩිතබා බියවැද්දීම් සහ ප්‍රතිවාදීන්ට පහරදීම් හැරුණු කොට මුලතිව් දිස්ත්‍රික්කයේ ඡන්ද මධ්‍යස්ථාන නියෝජිතයෙකුගේ නිවසක් ගිණිතැබීමක් ද විය.

පූර්ව මැතිවරණ කාලය තුළ අප වෙත ලද මුළු පැමිණිලි සංඛ්‍යාව 495ක් වන අතර එයින් 117ක් ඡන්ද නීති උල්ලංඝණය කිරීම් හා බිය වැද්දීම් වේ. මෙයට අමතර ව පක්ෂ ආධාරකරුවන්ට පහරදීම් ද දක්නට ලැබුණි. මුළු පුද්ගල පහරදීම් සංඛ්‍යාව 36ක් වූ අතර පුද්ගල රෝහල් ගතවීම් 43කි. අන්තර් පක්ෂ අතර ගැටුම් සාමාන්‍ය තත්ත්වයක් බවට පත්ව තිබුණි. සාපේක්ෂ වශයෙන් උතුරු පළාත් සභාවේ ප්‍රචණ්ඩක්‍රියාවන් අවම මට්ටමක් දක්නට ලැබුනද බිය වැද්ද වීම් දක්නට තිබුනි. රාජ්‍ය දේපළ භාවිතා කිරීම් පිළිබඳ පැමිණිලි 90ක් සහ ඡන්ද නීති උල්ලංඝණය කිරීම් පිළිබඳ පැමිණිලි 244 ක් වාර්තා වේ.

පැෆ්රල් සංවිධානය තහවුරු කර ගත් පැමිණිලි අතරින් ප්‍රජාතන්ත්‍ර ක්‍රියාවලියට බාධාවක් බලපෑමක් සිදු කළ හැකි සිද්ධීන් වාර්තා වූයේ උතුරු පළාතෙනි. ආරක්ෂක අංශවල සාමාජිකයන් මැතිවරණ ක්‍රියාවලියට සම්බන්ධවීම පිළිබඳ සිද්ධීන් අපගේ නිරීක්ෂකයින් විසින් අවස්ථා රැසක දී වාර්තා කර තිබුණි. එකී පැමිණිලි අතර සන්නද්ධ හමුදා පිරිස් තොරා ගත් අපේක්ෂකයන්ට ප්‍රදේශ කිහිපයක දී ප්‍රචාරණ කටයුතු සඳහා ඍජුව ම ආධාර කර ඇති අතර , ඇතැම් අවස්ථාවල දී ඡන්දය ප්‍රකාශ කළ යුත්තේ කුමන අපේක්ෂකයෙකුට ද යන්න සම්බන්ධයෙන් ද ඡන්ද දායකටයන්ට උපදෙස් දීම හා බලපෑම් සිදු කිරීම් පිළිබඳ අප වෙත වාර්තා වී ඇත. ඡන්දය දිනයට පෙර දිනයේ දී ද්‍රවිඩ ජාතික සන්ධානයේ අපේක්ෂිකාවකගේ නිවසට පහර දීමක් සිදු කර ඇති අතර එකී සිද්ධිය සිදු වූ ස්ථානයට පැමිණි පැෆ්රල්

සංවිධානයේ උතුරු පළාතේ පිහිටි පැමිණිලි ඒකකයට සම්බන්ධ ව ක්‍රියාකරන නීතීඥ වරයෙකු ද ඔවුන්ගේ පහර කෑමට ලක් ව රෝහල් ගත කරන ලදි.

පැෆ්රල් විදේශ නිරීක්ෂකයන් ඡන්දයට පෙරාතු ව ප්‍රකාශ කළේ ආරක්ෂක අංශවල සම්බන්ධය සම්බන්ධයෙන් පොදු ජනතාව, දේශපාලන පක්ෂ අපේක්ෂකයන් සිවිල් සංවිධාන ඇතුලු සියලු දෙනා දැඩි අවධානයකින් සිටින බව යි. කෙසේ වුව ද මේ සම්බන්ධයෙන් උතුරේ හමුදා අණදෙන නිලධාරීවරයාගෙන් විමසීමේ දී හමුදාව මැතිවරණ ක්‍රියාවලියට කිසියම් ආකාරයකින් හෝ සම්බන්ධ නොවන බව ඔහු විසින් ප්‍රකාශ කරන ලදි. එසේ ම උතුරේ පොලිස් ප්‍රධානීන් ද ප්‍රකාශ කරන ලද්දේ ද්‍රවිඩ ජාතික සන්ධානය හා දෙමළ මාධ්‍ය වැරදි චිත්‍රයක් විදේශ නිරීක්ෂකයන්ට ලබාදීමට උත්සාහා දරණ බව යි.

මැතිවරණ දිනයේ දී මැතිවරණ නීති බරපතල ලෙස උල්ලංඝණයවීම තවදුරටත් සිදු වූ අතර සිවිල් ඇඳුමින් සැරසුණු ආරක්ෂක අංශ සාමාජිකයන් ඡන්ද පොළ පිටත රැඳීසිටීම මඟින් ඡන්දදායකයින් හා අවට සිටි සියලු දෙනාට කිසියම් ආකාරයක බිය ගැන්වීමක් හා බලපෑමක් ඇති වූ බව යි. මේ සම්බන්ධයෙන් අපගේ නිරීක්ෂකයන් ආරක්ෂක අංශ සාමාජිකයන්ගෙන් විමසා සිටි අතර ඔවුන්ගේ පිළිතුර වූයේ ඡන්දය දිනයේ සාමය ආරක්ෂා කිරීම සඳහා ඔවුන් මෙලෙස රැඳී සිටින බව යි. එසේ ම ප්‍රදේශීය රූපවාහිනී සේවාවක් මගින් ද්‍රවිඩ ජාතික සන්ධානයේ පක්ෂ මාරුවක් පිළිබඳ ව්‍යාජ ප්‍රවෘත්තියක් ප්‍රකාශයට පත් කරමින් අදාළ අපේක්ෂකයා ආණ්ඩු පක්ෂයට එක් වූ බව විකාශනය කරන ලදි. මෙයට අමතර ව වෙනත් නිරීක්ෂණ ජාලයක නිරීක්ෂකයන් වෙත නිරීක්ෂණයේ දී සිදු වූ පහරදීම ද පැෆ්රල් ආයතනය තරයේ හෙලා දකී.

පළාත් සභා තුනේ ම ඉතා ප්‍රබල ලෙස රාජ්‍ය දේපළ මැතිවරණ කටයුතු සඳහා අයුතු ලෙස භාවිත වූ බව දැක ගත හැකි වූ අතර මෙයට රාජ්‍ය නිළධාරීන්, කාර්යාල සහ වාහන ද අයත් විය.

මැතිවරණ කොමසාරිස් දෙපාර්තමේන්තුවේ නිළධාරීන් විසින් මැතිවරණය නිසි පරිදි පැවැත්වීම පිණිස ගන්නා ලද උත්සාහය අප වඩාත් සුබවාදී ව දකින අතර අවශ්‍ය නිවැරදි ක්‍රියාමාර්ග ගැනීමේ දී ඔවුන්ගේ බලතලවල ඇති සීමා සහිතභාවය වෙනස් කිරීමට ප්‍රබල බාධාවක් වූ බව අපගේ නිරීක්ෂණය යි. එසේ ම රජයේ ජ්‍යෝෂ්ඨ සාමාජිකයන් පක්ෂ නායකයන් සහ පොලිස් නිළධාරීන් විසින් මැතිවරණ නීති උල්ලංඝණය කිරීම නැවැත්වීම පිළිබ ගන්නා ලද අවංක උත්සාහය අප විසින් අගය කළ යුතු ය. නමුත් ඔවුන්ගේ අසමත් වීම දේශපාලන සංස්කෘතියේ වෙනසක් හා ආයතනික ප්‍රතිසංස්කරණයක වැඩි අවශ්‍යතාවය පෙන්වා දෙන අතර මේ සම්බන්දයෙන් පැෆ්රල් සංවිධානය වඩා උනන්දුවකින් කටයුතු කරනු ලබයි.

පැෆ්රල් සංවිධානය විසින් රජයෙන් ඉල්ලා සිටිනු ලබන්නේ අපේක්ෂකයන් හා මැතිවරණ නිරීක්ෂකයන් වෙත සිදු කරන ලද පහරදීම් සම්බන්ධයෙන් විශේෂ අවධානයක් යොමු කර ඒ සම්බන්ධයෙන් අපක්ෂපාතී පරීක්ෂණයක් පවත්වන ලෙස යි.

ස්තුතියි!

මීට,

විශ්වාසී,

රෝහණ හෙට්ටිආරච්චි

විධායක අධ්‍යක්ෂක

# ப.்.வ்ரல் அமைப்பின் தேர்தல் தின ஊடக அறிக்கை
# 2013 செப்டம்பர் 21

வடக்கு, மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கு 142 பேரைத் தெரிவுசெய்வதற்காக நடைபெற்ற தேர்தல் வாக்களிப்பு காலம் இன்று மாலை 4.00 மணியுடன் முடிவடைந்தது. 2013 தேருநர் இடாப்பின்படி மேற்சொன்ன மூன்று மாகாண சபைகளுக்குரிய 08 தேர்தல் மாவட்டங்களின் 4,328,263 பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர். இத்தேர்தல் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வகிப்பதாகும். பல வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக தமது மாகாண சபைகளுக்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்துகொள்ளும் வாய்ப்பை இழந்திருந்த வடக்கின் மக்களுக்கு இது அரியதொரு சந்தர்ப்பமாகும். இத்தேர்தலில் காணக்கிடைத்த வடக்கின் மக்கள் தமது வாக்கை அளிப்பதற்கு முன்வந்த விதம் சிறப்பம்சமாகும். போருக்குப் பிந்திய இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிசெய்யும் சாதக அறிகுறியாகக் குறிப்பிடலாம்.

தேர்தல் தினத்தன்று, சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பிலிருந்து **(ANFREL)** 08 சர்வதேச கண்காணிப்பாளர்களும் 3,500 நிலைகொள் கண்காணிப்பாளர்களும் 750 நடமாடும் கண்காணிப்பாளர்களும் பவ்ரல் இயக்கத்தினால் ஈடுபடுத்தப்பட்டனர். அதற்கு மேலதிகமாக, தேர்தல் தினத்தன்று தம்மிச்சையாக பணியாற்றும் சுமார் 50 சட்டத்தரணிகள் எமது கண்காணிப்பு அணிகளுக்கு உதவினர். பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் 116 பிரதேச இணைப்பாளர்கள் தேர்தல் கண்காணிப்புச் செயன்முறையில் உதவினர்.

தேர்தல் தினத்தன்று மத்திய மாகாணத்திலிருந்து 40 முறைப்பாடுகளும் வட மேல் மாகாணத்திலிருந்து 32 முறைப்பாடுகளும் வட மாகாணத்திலிருந்து 34 முறைப்பாடுகளும் என்ற அடிப்படையில் ப.்.வ்ரல் அமைப்புக்கு 106 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. தேர்தல் சட்டமீறல்கள் குறித்து எமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் கண்டி பகுதியில் ஆகாயத்தைநோக்கி வேட்டுத்தீர்த்து பயமுறுத்தல், எதிரணியினர் மீதான தாக்குதல்கள் தவிர்ந்தவிடத்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்குச்சாவடி முகவர் ஒருவரின் வீடு எரிக்கப்பட்ட சம்பவம்  உட்பட வன்செயல்கள் அறிக்கையிடப்பட்டன.

தேர்தலுக்கு முன்னர் மொத்தமாக 495 முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 117 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட மீறல்களும் பயமுறுத்தல்களும் சார்ந்த வன்செயல்களாகும். அத்துடன், கட்சி பிரசார அலுவலகங்கள் மீதான தாக்குதல்களும் இடம்பெற்றன. தனிநபர்கள் மீதான 36 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதுடன், 43 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். ஒரே கட்சிக்குள் இடம்பெற்ற மோதல்களும் பொதுவாக இடம்பெற்றன. ஒப்பீட்டு ரீதியில்  வட மாகாண சபைத் தேர்தலில் வன்செயல்கள் மிகவும் குறைவாக இடம்பெற்ற அற்ற ஒரு நிலைமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தபோதும், பயமுறுத்தல் சம்பவங்கள் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. அரச வளங்களின் துஷ்பிரயோகம் சம்பந்தமான 90 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டமீறல்கள் குறித்த 244 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் வட மாகாணத்தில் இடம்பெற்ற சம்பவங்களில் ஜனநாயக செயன்முறையின் மீது பாதிப்புச்செலுத்தும் மிகவும் பாரதூரமான சம்பவங்களை உறுதிசெய்துகொள்ள ப.்.வ்ரல் அமைப்பினால் முடிந்தது. பாதுகாப்புத் தரப்பினர் தேர்தல் செயன்முறையில் ஈடுபட்ட சம்பவங்கள் பற்றிய பல்வேறு முறைப்பாடுகள் எமது கண்காணிப்பாளர்களுக்குக் கிடைக்கப்பெற்றன. குறித்த முறைப்பாடுகளிடையே தெரிவுசெய்யப்பட்ட சில வேட்பாளர்களுக்காக சில பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளில் ஆயுதப்படையினர் நேரடியாக உதவியுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் யாருக்கு வாக்களிக்க வேண்டும்  என்பது பற்றி வாக்காளர்களை அறிவுறுத்தல், அழுத்தங்கொடுத்தல் போன்ற சம்பவங்கள் குறித்து எமக்கு

அறிக்கையிடப்பட்டது. தேர்தலுக்கு முன்னைய தினம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெண் வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பஃவ்ரல் அமைப்பின் வட மாகாணத்தில் அமைந்துள்ள முறைப்பாட்டுப் பிரிவுடன் இணைந்து பணியாற்றும் சட்டத்தரணி ஒருவரும் குறித்த தாக்குதலில் சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

'பாதுகாப்புப் பிரிவினர் சம்பந்தமாக பொதுமக்கள், அரசியல் கட்சி வேட்பாளர்கள், சிவில் அமைப்புக்கள் உட்பட அனைவரும் பெரும் கரிசனையுடன் இருப்பதாக' பஃவ்ரல் அமைப்பின் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தேர்தலுக்கு முன்னர் தெரிவித்தனர். எவ்வாறாயினும், இது சம்பந்தமாக வடக்கு கட்டளையிடும் இராணுவ அதிகாரியிடம் வினவியபோது, தேர்தல் செயன்முறையுடன் படையினர் எவ்விதத்திலும் தொடர்புபடவில்லை எனத் தெரிவித்தார். அதேபோல், தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழ் ஊடகங்களும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு தவறான செய்திகளை வழங்க முயற்சிப்பதாக வடக்கின் பொலிஸ் முக்கியஸ்தர் ஒருவர் குற்றம் சுமத்தினார்.

தேர்தல் தினத்தன்று தேர்தல் சட்டங்கள் தொடர்ந்தும் பாரதூரமான விதத்தில் மீறப்பட்டன. சிவில் உடை தரித்த பாதுகாப்புப் பிரிவினர் வாக்குச்சாவடிகளுக்கு வெளியே இருந்ததன் மூலம் வாக்காளர்களும் அயலிலிருந்த அனைவரும் ஒருவித அச்சத்துடன் இருந்தனர். இது சம்பந்தமாக எமது கண்காணிப்பாளர்கள் பாதுகாப்புப் பிரிவினரிடம் வினவியபோது தேர்தல் தினத்தன்று அமைதி காப்பதற்கு அவர்கள் அங்கிருப்பதாக பதில் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல், பிரதேச தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரின் கட்சி மாற்றம் பற்றிய தவறான செய்தியொன்று அறிக்கையிடப்பட்டதுடன், குறித்த வேட்பாளர் ஆளுங்கட்சியுடன் இணைந்துகொண்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, வேறு கண்காணிப்பு வலையமைப்பொன்றின் கண்காணிப்பாளர்கள் மீதான தாக்குதல்களையும் பவ்ரல் இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மூன்று மாகாண சபைகளிலும் மிகவும் பாரதூரமான விதத்தில் அரச சொத்துக்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அரசாங்க உத்தியோகத்தர்களும் அலுவலகங்களும் வாகனங்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளன.

தேர்தல் திணைக்கள அதிகாரிகள் உரியமுறையில் தேர்தலை நடாத்த எடுத்துக்கொண்ட முயற்சியை நாம் மிகவும் நல்லெண்ணத்துடன் நோக்குகின்றோம். எனினும், அவசியமான சரியான செயன்முறைகளை மேற்கொள்ளும்போது அவர்களின் அதிகாரங்களின் மட்டுப்பாட்டை மாற்றியமைக்க பெரும் தடையாக அமைந்தது என்பதை நாம் அவதானித்தோம். அதேபோல், அரசாங்க சிரேஷ்ட அங்கத்தவர்கள், கட்சித் தலைவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களினால் தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதை நிறுத்துவது தொடர்பில் எடுக்கப்பட்ட நேர்மையான முயற்சியை நாம் போற்றுகின்றோம். அவர்களின் அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தையும் நிறுவனத்தை மீள்கட்டமைக்கும் தேவை குறித்தும் பஃவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டுவதுடன், இது சம்பந்தமாக பஃவ்ரல் அமைப்பு மிகவும் கரிசனை கொண்டுள்ளது.

வேட்பாளர்களும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் மீதான தாக்குதல்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி அது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையொன்றை நடாத்துமாறு பஃவ்ரல் அமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறது.

ரோஹண ஹெட்டிஆரச்சி
நிறைவேற்றுப் பணிப்பாளர் - பஃவ்ரல் அமைப்பு